பாராளுமன்றக் கூட்டத் தொடர் இல - **79**

நிறுவனத்தின் பெயர் - சுகாதார அமைச்சு

பகுதி ஒன்று - 67.00

	செயல்திறன் மதிப்பீட்டின் பிரகாரம் குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடு கள்	குறைபாடுகளை சரி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை
1	இழப்புகள் குறித்த பதிவுகள் இன்று வரை நாளது வரைப்படுத்தப்பட வில்லை.	சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் வரும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களால் தற்போது தனித்தனியாக சேதங்களுக்கான பதிவகள் நாளது வரைப்படுத்தப்பட்டு பராமரிக் கப்படுகின்றன
2	இடர் பதிவேடு இதுவரை புதுப்பிக்கப் பட வில்லை.	இடர் பதிவேடு பராமரிக்கப்படவில்லை.
3	கணக்காய்வாளர் தலைமை அதிபதி யினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப் படவில்லை.	கணக்காய்வு ஐயவினாக்ககள், சுகாதார அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அனுப்பி தெளிவு படுத்தல்கள் பெறப்பட வேண்டும் என்பதால், அத்தகைய பதில்களைப் பெறுவதில் சிறிது கால தாமதம் ஏற்படலாம் என்றாலும், முடிந்தவரை சாத்தியமான எல்லா சந்தர்ப்பங்களிலும் உரிய காலப்பகுதியினுள் பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
4	கணக்காய்வாளர் தலைமை அதிபதி யினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக் கும் ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங் கப்படவில்லை.	உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பின்னர் வழங்கப்படும் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிற்கு அனுப்பப்பட்டு அது கிடைக்கப்பெற்று ஒரு மாதத்திற்குள் உள்ளக கணக்காய்வு அறிக்கை களுக்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இதுவரை கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனங்களில், கணிசமான எண்ணிக்கை யிலான நிறுவனங்கள் கணக்காய்வு அறிக்கை களுக்கான பதில்களை வழங்கியுள்ளன. அத்துடன் மாகாண மட்டத்தில் கணக்காய்வு முகாமைத் துவக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், மாகாண கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் உள்ளக கணக்காய்வு ஐயவினாக் களுக்கான பதில்களை ஒரு மாத காலத்திற்குள் வழங்குமாறு வைத்தியசாலை பணிப்பாளர் களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது

5	மீளாய்வாண்டில், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் சரியான முறையில் நடைபெற வில்லை.	தவிர்க்க முடியாத காரணங்களால் 2022 ஆம் ஆண்டில் திட்டமிட்டபடி 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்த முடிய வில்லை என்றாலும், 03 கூட்டங்கள் மாத்திரம் நடத்தப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டு முதல், சுற்றறிக்கைகளால் வகுக்கப்பட்ட விதிகளின்படி, காலாண்டிற்கு ஒரு முறை குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டிற்கான குழு கூட்டங்கள் ஏற்கனவே 2024.03.21, 2024.07.26, 2024.11.06, 2024.12.09 இலும் மற்றும் நான்காவது காலாண்டிற்கான குழுக் கூட்டம் 2025.01.31 அன்றும் நடைபெற்றது. 2024 ஆம் ஆண்டுக்கான சுற்றறிக்கைகளுக்கு இணங்க, மாகாண கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை காலாண்டிற்கு ஒரு முறை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட குழுத் தலைவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. 03 ஆம் காலாண்டு தொடர்பான அனைத்து மாகாண கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களும் ஏற்கனவே நடைபெற்றுள்ளதுடன், பல மாகாணங்களில் 04 ஆம் காலாண்டுக்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களும் நடைபெற்றுள்ளன. 2024 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டிற்கான மாகாண கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுக் கூட்டங்களை நடத்துமாறு எஞ்சியுள்ள மாகாணக் குழுத் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.
6	வருடாந்த இருப்பு கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட மிகைகள், குறை பாடுகள் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் பிற பரிந்துரைகள் ஆகியன நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயல்படுத்தப்படவில்லை.	சுகாதார அமைச்சின் 2024.10.22 திகதிய பொது சுற்றறிக்கை இல. 01-38/2024 இனூடாக சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் செயல்படும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த சுற்றறிக்கையின் மூலம், இருப்பு கணக்கெடுப்பு களை நடத்துவதற்கான காலக்கெடு, கணக்கெடுப்பு சபை உறுப்பினர்களை நியமித்தல், அறிக்கைகளை சமர்ப்பித்தல், நிதி சாராத சொத்துகளை உண்மையாகவும் நியாயமாகவும் இறுதி நிதி நிலை அறிக்கைகளில் குறிப்பிடுதல், கணக்கெடுப்பு சபைகளின் அறிக்கைகளின்படி செயற்படுதல், இருப்பு ஆய்வுகள்/விசாரணைகள் போன்றவை, பயன் படுத்த முடியாத பொருட்கள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், கழிவகற்றும் சபைகளை நியமித்தல் மற்றும் அப்புறப்படுத்த வேண்டிய பொருட்களை புத்தகங்களிலிருந்து அகற்றுதல் தொடர்பான வழிமுறைகள் வழங்கப் பட்டுள்ளன.

7	அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கைவசம் இல்லை.	சுகாதார செயலாளர்/சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகத்தின் பதவிப்பெயர்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட, தற்போது பதிவுச் சான்றிதழ்கள் இல்லாத வாகனங்களின் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், பதிவுச் சான்றிதழ் களின் மூலப் பிரதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
8	இலங்கையின் இலச்சினை அனைத்து வாகனங்களிலும் வரையப்படவில்லை.	கையிருப்பிலுள்ள அனைத்து வாகனங்களிலும் இலங்கையின் இலச்சினை பொருத்தப்பட்டுள்ளது. மற்றும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களில் இலங்கையின் இலச்சினைகளை பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.
9	உபயோகிக்கமுடியாது என அறிவிக் கப்பட்ட ஒரு வாகனம் 8 மாதங்கள் ஆகியும் அப்புறப்படுத்தப்படவில்லை.	2024 ஜனவரியில் நடைபெற்ற ஏலத்திற்குப் பிறகு, அப்புறப்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்ட வாகனங்கள், அகற்றல் குழுவிடம்(Disposal Committee) ஒப்படைக்கபபட்ட பின்னர் மதிப் பீட்டுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன. அந்த அறிக்கை கிடைத்ததும் ஏலத்திற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும். ஏலத்தை நடத்தும் போது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாகனங் கள் சேகரிக்கப்பட்டு ஏலம் விடப்படுவதாலும் அதற்கு சிறிது காலம் எடுக்கும் என்பதாலும் மாகாண மட்டத்தில் ஏலங்கள் நடத்தப்பட்டு எதிர்காலத்தில் கூடிய விரைவில் இந்த செயல்முறையை முடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
10	நிதி ஒழுங்கு விதிகளின்படி அரசாங்கத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களுக்கு ஏற்படும் விபத்துகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படவில்லை.	தற்போது, வாகனங்களுக்கு ஏற்படும் விபத்துகள் தொடர்பாக, நிதி ஒழுங்குவிதிகளின்படி பதிவேடு ஒன்று நாளதுவரைப்படுத்தப்பட்டு பராமரிக்கப் பட்டு வருகின்றது.
11	நிதி ஒழுங்குவிதி 94(1) இன் படி, ஒரு செலவின விடயம் ஒன்றின் பொருட்டு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டைப் பயன் படுத்தியதன் விளைவாக, ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்த ஒதுக்கீடு களின் வரம்பை விட பொறுப்புகள் அதிகமாக இருந்தன.	சுகாதார சேவைகளை தொடர்ச்சியாக வழங்கு வதன் பொருட்டு, பல வைத்தியசாலைகள் இவ்வாறு ஒதுக்கீட்டு வரம்பை மீறிய அர்ப்பணிப்புக்களை மேற்கொண்டுள்ளன. பொது திறைசேரியால் போதுமான ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்படாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நிதி ஏற்பாடுகளை மீறிய கடப்பாடுகளை பொறுப்பெடுக்க வேண்டாம் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

12	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவைத் தொகைகள் செலுத்தித் தீர்க்கப்பட வில்லை.	2024.12.31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் மீதி ரூ.90.928 மில்லியன் ஆகும். இருப்பினும், ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் நிலுவைகளை வசூலிக்க வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங் களுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டுள்ளன, மேலும் இந்த ஆண்டுக்குள் முடிந்த வரை கடன் நிலுவைகளை வசூலிப்பதற்கு தேவை யான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
13	பொது வைப்பு கணக்கில் காலாவதி யாகி நிலுவையிலுள்ள வைப்புத் தொகைகள் தொடர்பாக நி.ஒ. 571 இன் படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.	F.R.571 இன் படி, 02 வருடங்களுக்கும் மேலான பொது வைப்பு நிலுவைகளை தீர்க்காததற்கான காரணங்கள், அதுவரை வைப்பாளர்கள் எந்த கோரிக்கையையும் முன்வைக்கவில்லை, சட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் நிலுவையில் இருந்தன, மேலும் பொது வைப்பு தொகைக்கணக்கில் தொடர்புடைய வைப்புத் தொகைள் மேலும் தக்கவைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இந்த வைப்புத்தொகைகளில் பெரும்பாலானவை கட்டிடம் சம்பந்தமான பிரிவுடன் தொடர்புடை யவை. மேலும் அந்த வைப்புத்தொகைகள் கட்டி டங்களின் கட்டுமானங்கள் தொடர்பாக வைப்புச் செய்யப்பட்ட வைப்புத்தொகைகளாகும், மேலும் அவற்றில் பெரும்பாலானவை குறித்து இதுவரை ஒப்பந்த நிறுவனங்களால் எந்த உரிமைகோரலும் முன் வைக்கப்படவில்லை. எவ்வாறாயினும், F.R 57 இன் படி, 02 வருடங்களுக் கும் மேலாக நிலுவையில் உள்ள பொது வைப்பு நிலுவைகளை செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் பிரகாரம், சுகாதார அமைச்சின் தலைமை அலுவலகத்தில் கட்டிடப் பிரிவுடன் தொடர்புடைய பொது வைப்பு கணக்கில் உள்ள தற்போதைய நிதிகளிலிருந்து 2015 ஆம் ஆண்டுக்கான உரிமை கோரப்படாத தொகையான ரூ. 7,326,873 இனை ஜனவரி 2025 இல் அரசாங்க வருவாய்க்கு வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதே போல், 02 ஆண்டு களுக்கும் மேலான மீதமுள்ள வைப்புத் தொகைகளும் 2025 ஆம் ஆண்டில் அரசாங்க வருமானத்தில் வரவு வைக்கப்படும். மேலும், பல வைத்தியசாலைகள் தங்கள் பொது வைப்பு நிலுவைகளை செலுத்தி தீர்ப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளன.
14	F.R. 371 இன் படி வழங்கப்பட்ட தற்காலிக உப கட்டுநிதிப்பணம், பணி முடிந்த ஒரு மாதத்திற்குள் தீர்க்கப் படவில்லை.	F.R. 371 (5) மற்றும் பொது நிதி சுற்றறிக்கை 01/2020 இன் படி, முன்பணம் பெறப்பட்ட தொடர்புடைய பணி முடிந்த 10 நாட்களுக்குள் முன்பணத்தை செலுத்த வேண்டும் என்றும் மேலும் முன்பணம்

		பெறப்பட்ட பணி ரத்து செய்யப்பட்டால், பெறப் பட்ட முன்பணத்தை செலுத்தி மீண்டும் முன்பணத் திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் சம்பந்தப்பட்ட பணியை முடிக்க வேண்டும் என்றும் ஒவ்வொரு பிரிவிற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்காலிக உப கட்டுநிதிப் பணங்களைப் பெற்று அத்தகைய இரண்டு கட்டுநிதிப் பணங்களைத் தீர்த்து வைக்கத் தவறிய அதிகாரிகளுக்கு மீண்டும் கட்டுநிதிப்பணங்கள் வழங்கப்படக் கூடாது எனவும் நிதிக் கட்டுப்பாடு தொடர்பான அதிகாரப் பகிர்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது.
15	திரட்டப்பட்ட வருவாய் தொடர்புடைய விதிமுறைகளுக்கு இணங்க திருப்பிச் செலுத்தப்படவில்லை.	நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க அனைத்து நிறுவனங்களுக்கும் வருவாயில் இருந்து பணத்தைத் திரும்பப் பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தற்போது அனைத்து நிறுவனங்களும் முறையான அனுமதியைப் பெற்று வருவாயை திருப்பிச் செலுத்தி வருகின்றன.
16	சேகரிக்கப்பட்ட வருவாய் நேரடியாக வருவாயில் வரவு வைக்கப்பட வில்லை அல்லது வைப்பு கணக்கில் அவற்றைப் பராமரித்து ஒரு மாதத்திற்கும் குறை வான காலத்திற்குள் வருவாய் கணக்கிற்கு அனுப்பப்பட வில்லை.	ஒவ்வொரு வைத்தியசாலை மற்றும் நிறுவனத்தால் திரட்டப்படும் வருவாயை வருவாய் கணக்கில் நேரடியாக வரவு வைக்குமாறும் மற்றும் இது சாத்தியமில்லாத சந்தர்ப்பங்களில், அவற்றை பொது வைப்புக் கணக்கில் வைத்திருக்கவும் மற்றும் ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திற்குள் வருவாய் கணக்கில் வரவு வைக்குமாறும் அனைத்து வைத்தியசாலை களுக்கும் நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.
17	அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளுக்கு அதிகமாக பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர்.	சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்குத் தேவையான பணியாளர்களை இணைத்துக் கொள்ளவோ அல்லது மாற்றவோ அது தொடர் பான விடயத்தை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி அதற்கான அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.
18	2017.09.20 ஆம் திகதிய 2017 ஆம் ஆண்டின் 04/2017 ஆம் இலக்க முகா மைத்துவ சேவைகள் சுற்றறிக்கை யின் பிரகாரம், ஒரு காலாண்டு முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் நிறுவனத்தின் பணியாளர்கள் பற்றிய விவரங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வில்லை. .	சுகாதார அமைச்சின் பணியாளர்கள் தொடர்பான தகவல்களை நாளதுவரைப்படுத்தும் (Updating) செயற்பாடு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30 மற்றும் டிசம்பர் 31 ஆகிய திகதிகளில் மேற்கொள்ளப்படு கிறது. இந்த தகவலை மிகவும் திறமையாகவும், விரைவாகவும் நாளதுவரைப்படுத்தும் வகையில், நிகழ்நிலை (online) முறை மூலம் தகவல்களைப் பெறுவதற்கான நடைமுறை ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது அதன்படி, ஜூன் 30, 2024 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் தொடர்பான தகவல்கள் ஆன்லைனில் (online) பெறப்பட்டு,

		அந்தத் தகவல் சுகாதார அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஆன்லைனில் தொடர்புடைய தகவல்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தங்களுக்கு தயவுடன் தெரிவிக்கப் படுகின்றது.

பகுதி இரண்டு-39.00

	செயல்திறன் மதிப்பீட்டின் பிரகாரம் குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடு கள்	குறைபாடுகளை சரி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை
01	2018.01.24 ஆம் திகதிய 05/2018(1) எனும் இலக்க சுற்றறிக்கையினூடாக திருத் தப்பட்ட 2008.02.06 ஆம் திகதிய 05/2008 எனும் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக் கையின் பிரகாரம் பிரஜைகள்/ சேவை பயனாளிகள் சாசனம் முறையாக தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வில்லை.	பிரஜைகள் /சேவை பயனாளிகள் சாசனம் தயாரிக்கப்பட்டு அதன் சிங்கள பதிப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது
02	நிறுவனத்தினால் பிரஜைகள்/ சேவைப் பயனாளிகள் சாசனத்தின் பயன் பாட்டை கண்காணிப்பதற்கும், மதிப் பீடு செய்வதக்குமான ஒரு வழிமுறை வகுக்கப்படவில்லை.	அமைச்சுடன் தொடர்புடையதாக பிரஜைகள் / சேவைப் பயனாளிகள் சாசனத்தை செயல்படுத் துவது தொடர்பாக ஏதேனும் சிக்கல்கள் இருந்தால், 1907 என்ற அவசர தொலைபேசி இலக்கம் மூலமா கவோ, 0707907907 என்ற வாட்ஸ்அப் இலக்கத்தி னுடாகவோ அல்லது suwasawana@health.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவோ அல்லது அமைச்சின் குறை தீர்க்கும் ஒருங்கிணைப்பு பிரிவு ஊடாகவோ எங்களுக்கு அறிவிக்கலாம். மேலும், சாசனம் தொடர்பான ஏதேனும் ஆலோசனைகள்/ புகார்களை 0112670182 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ 0112693866 என்ற தொலை நகல் இலக்கத்தினூடாகவோ அல்லது sasinformation@health.gov.lk என்ற மின்னஞ்சல் (முகவரியூடாகவோ சிரேஸ்ட உதவிச் செயலாளரு க்கு (தகவல் மற்றும் விளம்பரம்)) தெரிவிக்கலாம்.
03	2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 எனும் இலக்க பொது நிர்வாக சுற்றறிக் கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், முறையாக வரைவு செய்யப்பட்ட மனித வளத் திட்டம் ஒன்று தயாரிக்கப் படவில்லை.	உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கை பிரதி நிதி அலுவலகத்தினால், (WHO இலங்கை) கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்துடன் இணைக்கப்பட்ட நிபுணர் குழுவின் **ஒத்துழைப்புடன்** உருவாக்கப்பட்ட, சுகாதாரத் திற்கான மனித வளங்கள் மூலோபாயத் திட்டம் 2020–2030 (HRH Strategic Plan 2020–2030) இறுதி வரைவு

		கட்டத்தில் உள்ளது. இலங்கை எதிர்கொள்ளும் சமூக-பொருளாதார சவால் களால் ஏற்படும் மனித வள முகாமைத்துவம் உள்ளிட்ட புதிய போக்குகளைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட ம்னித வளத் திட்ட வரைவை புதுப்பித்து, அதனடிப்படையில் 2025-2035 காலகட்டத்திற்கான புதிய மனித வள செயல் திட்டத்தை தயாரிப்பதற்கான முதற்கட்ட பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதால், தொடர்புடைய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு விரைவில் இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
04	தயாரிக்கப்பட்ட மனிதவள மேம்பாட் டுத் திட்டத்தினூடாக 50% சதவீதத்திற்கும் அதிகமான ஊழியர்களுக்கு வருடத்திற்கு 12 மணிநேரத்திற்குக் குறையாத குறைந்தபட்ச பயிற்சி வாய்ப்பைக் கூட உறுதி செய்ய வில்லை.	நாடு முழுவதும் உள்ள அனைத்து சுகாதார நிறுவ னங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் 150,000 க்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். இருப்பினும், பயிற்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் 50 மில்லியன் ரூபா தொகையானது, சேவைக்கால பயிற்சி படிப்புகளுக்கு மட்டுமின்றி, 15 அடிப்படை பயிற்சி படிப்புகளுக்கான செலவினங்கள் மற்றும் பிற தொடர்புடைய பயிற்சி நடவடிக்கைகளுக்கான செலவினங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இதன் விளைவாக, சுகாதார நிறுவனங் களின் பயிற்சி வாய்ப்புகளுக்கான கோரிக்கை யை நிறைவேற்றுவது சவாலாக உள்ளது. இருப்பினும், 2022 ஆம் ஆண்டில், 6175 பேருக்கு பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டன, மேலும் 2023 ஆம் ஆண்டில் 10147 பேருக்கு பிற செலவின விடயங்களிலிருந்து ஒதுக்கீடுகளைப் பெறுவதன் மூலம் பயிற்சி வாய்ப்புகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வருடாந்த துறைசார் திட்டத் தின்படி, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய சுமார் 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு தேவைப் படுகிறது. 2025-2035 ஆம் ஆண்டிற்கான புதிய மனிதவள செயல்திட்டத்தில் இந்த முன்மொழி வினை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்
05	அனைத்து ஊழியர்களையும் உள்ளடக் கியதாக செயல்திறன் ஒப்பந்தங்கள் வரைவு செய்யப்படவில்லை அல்லது உள்ளிடப்படவில்லை.	2018.01.24 ஆம் திகதிய 02/2018 எனும் இலக்க பொ.நி.சுற்றறிக்கையினூடாக நிறுவனத்தில் பணி புரியும் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயல்திறன் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவது குறித்து எனது 2022.03.23 ஆம் திகதிய CA/GCE/Miscellaneous Orders/01/2022 எனும் இலக்க கடிதம் மூலம் அனைத்து துறைத் தலைவர்களுக் கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2022 ஆம் ஆண்டு முதல் ஆண்டு சம்பளம் அதிகரிக்கும் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கும் போது வருடாந்த செயல்திறன் ஒப்பந்தம் பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்படி, 2022 ஆம் ஆண்டு முதல் வருடாந்த சம்பள அதிகரிப்புகள் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட போது வருடாந்த செயற்திறன் உடன்படிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவ

		டிக்கை எடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, 02/2018 எனும் இலக்க பொ.நி.சுற்றறிக்கைக்கு திருத்தமாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2023.11.30 ஆம் திகதிய 02/2018 (1) எனும் இலக்க பொ.நி.சுற்றறிக்கையின் பிரகாரம் 02/2018 (1) இன் பந்தி 03 இல் உள்ள அறிவுறுத்தல் களின்படி வருடாந்த செயல்திறன் ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவது இனி தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் அந்த திகதியிலிருந்து செயல்திறன் ஒப்பந்தங்களில் கையொப்பமிடும் நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளது.
06	மனிதவள அபிவிருத்தித் திட்டங் களைத் தயாரிப்பதற்கும் திறன் மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டங் களைச் செயல்படுத்துவதற்கும் நிறுவ னத்திற்குள் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவில்லை.	மனித வள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப் பதற்கும் திறன் மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதனை மேற்பார்வை யிடுவதற்கும் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் சமந்த ரணசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.
07	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய தணக்காய்வு கருத்தானது, ஒரு தகுதி வாய்ந்த கருத்து / நிராகரிக்கப்பட்ட கருத்து/சாதகமற்ற கருத்தாக இருந்தது	தணக்காய்வுக் கருத்தின் அடிப்படையிலான குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
08	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப் பட வில்லை.	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து அந்தந்த பிரிவு மற்றும் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள் ளது. மற்றும் உரிய பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன
09	பொதுக் கணக்குக் குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள்/ கட்டளை கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	சுகாதார அமைச்சு தொடர்பாக பொதுக் கணக்குக் குழுக்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைகள்/ கட்டளைகளை செயல்படுத்துவது குறித்து தொடர்புடைய பிரிவுகள் மற்றும் அதிகாரிகளுக் குத் தெரிவிக்கப்பட்டுள்ளது, மேலும் அவை செயல் படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
10	நிதி ஒழுங்குவிதி 156 (1) இன் படி, அதிகாரிகளால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை வசூலிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வில்லை	2024.10.22 ஆம் திகதிய 01-38/2024 எனும் இலக்க பொது சுற்றறிக்கை மூலம் தேவையான அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ஆரம்ப கட்ட விசாரணைக் குழுவிற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்போதும் மற்றும் ஆரம்ப கட்ட நடவடிக் கைகளுக்கான ஆதரவை வழங்கும்போதும், விசாரணை குழுக்களிடமிருந்து பெறப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் கட்டணங்களை வசூலிக்கும் நடவடிக்கைகள் குறித்து பின்தொடர் தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன.

11	FR 119 இன் படி செலுத்துவதற்கு உத்தரவிடப்பட்ட கூடுதல் கட்டணம் (Surcharges) வசூலிக்கப்பட வில்லை.	2024.10.22 ஆம் திகதிய 01-38/2024 எனும் இலக்க பொது சுற்றறிக்கை மூலம் தேவையான அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ஆரம்ப கட்ட விசாரணைக் குழுவிற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்போதும் மற்றும் ஆரம்ப கட்ட நடவடிக் கைகளுக்கான ஆதரவை வழங்கும்போதும், விசாரணை குழுக்களிடமிருந்து பெறப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் கட்டணங்களை வசூலிக்கும் நடவடிக்கைகள் குறித்து பின்தொடர் தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன.
12	அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த அதிகாரிகளை உரிய முறை யில் இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2023.12.04 ஆம் திகதிய உள்ளகக் குறிப்பின்படி, அமைச்சில் பணிபுரியும் அனைத்து பொது முகாமைத்துவ உதவியாளர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், அலுவலக உதவியாளர்கள்(KKS) மற்றும் சுகாதார உதவி அலுவலர்கள்(SKS) ஆகியோரின் சேவைத் தகவல்கள் கோரப்பட்டு, உள்ளக இடமாற்றக் குழுவின் பரிந்துரையின்படி 2024.04.23 ஆம் திகதி அன்று உள்ளக இடமாற்ற கட்டளைகள் வழங்கப்பட்டன. இருப்பினும், இந்த இடமாற்ற செயல்முறை தொடர்பாக எழுந்த சிக்கலானதொரு சூழ்நிலை காரணமாக, அது 2024.07.23 ஆம் திகதி அன்று ரத்து செய்யப்பட்டது. இருப்பினும், தற்போதைய சுகாதாரச் செயலாளர், 5 வருடங்களுக்கும் மேலாக ஒரே பிரிவில் பணி யாற்றிய அலுவலர்களின் உள்ளக இடமாற்றங் களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார். அந்த அறிவுறுத்தல்களின்படி, உள்ளக இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு இடமாற்றக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும், அதன் நியமனத்தின் பின்னர், பெறப்படும் பரிந்துரைகளின் அடிப் படையில் உள்ளக இடமாற்றங்கள் மேற்கொள்ளப் பட வேண்டும்.

டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ,
சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர்.